DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: சுலோச்சனா | Spouse Name: விக்ரம் |
| Village: ஆலங்காயம் | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: 53 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 01.11.2022.

**O.S. 24/2017 -** வா**.**சா**.1**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

01) வழக்கு சொத்து என் மாமியாருக்கு எவ்வாறு பாத்தியம் என தெரியுமா என்றால் அதை அவர் கிரையம் வாங்கியிருந்தார். யாரிடமிருந்துஅந்த சொத்தை என் மாமியார் வாங்கினார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. என் மாமியார் உயிருடன் இருந்தவரை வழக்கு சொத்தில் என் மாமியார் சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்பதை காண்பிக்க அதற்குரிய சிட்டா, அடங்கல் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

02) என் மாமியார் உயிருடன் இருந்தவரை வரி ரசீதுகள் செலுத்தி வந்ததாக தெரிவித்துள்ளதை நிரூபிக்க வரி ரசீதுகள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் மாமியார் எப்போது இறந்தார் என்றால் அவர் சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் எனக்கு தேதி, வருடம் நினைவில்லை. எனது மாமியார் இறப்பிற்கு பிறகு வழக்கு சொத்தில் எனது கணவர் சுவாதீனத்தில் இருந்து வந்ததாக சொல்வதை நிரூபிக்க சிட்டா, அடங்கல் மற்றும் வீட்டு வரி ரசீதுகள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

03) எனது கணவர் 12.08.2017 அன்று இறந்துவிட்டதாக சொல்வதற்கு பிறகுவழக்கு சொத்தில் நான் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாக தெரிவிப்பதை நிரூபிக்க சிட்டா, அடங்கல், வீட்டு வரி மற்றும் மின் கட்டண ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் கணவர் வெளியூரில் இருந்ததை பயன்படுத்தி என் மாமியாரிடம் தவறான சங்கதிகளை சொல்லி ஒருஆவணம் ஏற்படுத்தி கொண்டதாக எங்கள் வழக்குரையில் தெரிவித்துள்ள சங்கதி வழக்கிற்காக சொல்லப்படும் தவறான சங்கதி என்று சொன்னால் சரியல்ல.

04) ஆலங்காயம் கிராமம், கிராம நத்த சர்வே எண்.385/1–ல் ரோடுக்கு கிழக்கு, போடிகான் வீட்டிற்கு மேற்கு, ஒட்டன் தெருவிற்கு செல்லும் சந்துக்கு வடக்கு, மொட்டடோடன் வீட்டிற்கு தெற்கு என்ற செக்குபந்திக்கு கிழக்கு மேற்கு 51 அடி, வடக்கு தெற்கு 21 அடி மற்றும் அதிலுள்ள கூரைவீடும் ஆதியில் முனிகான் மகன் நல்லையபோயன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த சொத்து நல்லையபோயனின் சுவாதீன அனுபவத்தில் இருந்து அவர் குடியிருந்து

வந்தார் என்றால் சரிதான். நல்லையபோயன் அவரது மனைவி சின்னு அம்மாள் என்பவர் பெயருக்கு 11.04.1966 அன்று தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அந்த தானப்பத்திரத்தின் அடிப்படையில் அந்த சொத்தானது சின்னு அம்மாள் அனுபவத்தில் தான் இருந்து வந்தது என்றால் சரிதான். சின்னு அம்மாள் அவர் பெயரிலேயே வீட்டு வரி, மின்சார வரி செலுத்தி வந்தார் என்றால் சரிதான்.

05) என் மாமியார் பெயர் போலீஸ் சுப்பிரமணியன் மனைவி சாந்தி என்றால் சரிதான். சின்னு அம்மாளிடமிருந்து எனது மாமியார் சாந்தி 19.01.1975 அன்று வழக்கு சொத்தினை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். எனது மாமியார் கிரையம் வாங்கியது முதலாக வழக்கு சொத்தில் அவரே சுவாதீனத்தில் இருந்து வந்து அவரே வீட்டு வரி, மின்சார வரி செலுத்தி வந்தார் என்றால் சரிதான். எனது மாமியார் பிரதிவாதி வசந்தா பெயருக்கு 27.09.2006 அன்று வழக்கு சொத்தினை கிரையம் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் எனக்கு அந்த விவரம் தெரியாது நாங்கள் வெளியூரிலிருந்து ஊருக்கு வந்தபோது அவர்கள் குடியிருந்தார்கள் நாங்கள் வெளியேற சொன்னதற்கு வெளியேற மறுத்துவிட்டார்கள்.

06) வழக்கு சொத்தில் வசந்தா கிரையம் பெற்றது முதலாக அவரே குடியிருந்து வருகிறார் என்றால் கிரையம் பெற்றது பற்றி எனக்கு தெரியாது ஆனால் அவர் தான் குடியிருந்து வருகிறார். வழக்கு சொத்திற்கு பிரதிவாதி பெயரில் மனைவரி தோராய பட்டா 25.04.2007 அன்று வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு அந்த விவரம் தெரியாது. வழக்கு சொத்தில் எனது மாமியார் குடியிருந்த வீட்டை இடித்துவிட்டு பிரதிவாதி அதில் புதியதாக வீடு கட்டியுள்ளார் என்றால் ஆமாம் கட்டியுள்ளார் நாங்கள் ஊரில் இல்லாதபோது கட்டியுள்ளார். அவ்வாறு புதியதாக வீடு கட்டுவதற்கு பிரதிவாதி ஆலங்காயம் பஞ்சாயத்தில் 17.08.2009 அன்று அனுமதி பெற்றுள்ளார் என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது.

07) வழக்கு சொத்திற்கு என் மாமியாரிடமிருந்து கிரையம் பெற்றது முதலாக பிரதிவாதி தான் வீட்டு வரி மின் கட்டணம் செலுத்தி வருகிறார் என்று சொன்னால் இல்லை நாங்கள் தான் செலுத்தி வருகிறோம். வழக்கு சொத்திலுள்ள மின் இணைப்பு எண் எனக்கு தெரியுமா என்றால் இல்லை ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். வழக்கு சொத்திற்கு வருடத்திற்கு எவ்வளவு வீட்டு வரி செலுத்துகிறோம் என்றால் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை சுமார் ரூ.100/- செலுத்துவோம். வழக்கு சொத்து வீட்டிற்கான வரி விதிப்பு எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்திற்கான வீட்டு வரி மற்றும் மின் கட்டண ரசீதுகளை எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

08) கிரைய பத்திரம் ஏற்பட்ட சமயத்தில் நாங்கள் வெளியூரில் குடியிருந்து வந்தோம் என்பதை நிரூபிக்க எங்கள் தரப்பில் ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதி பெயரில் உள்ள ஆதார் அட்டை, குடும்ப அடையாள அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றில் பிரதிவாதியின் முகவரியாக வழக்கு சொத்து வீடு குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் வசந்தா தான் புதிய வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

09) எனது மாமியார் எழுதிகொடுத்த கிரைய ஆவணம் மற்றும் அரசாங்கத்தில் வழங்கப்பட்ட பட்டா உள்ளிட்ட வருவாய்த்துறை ஆவணங்களின்படி வழக்கு சொத்தானது பிரதிவாதிக்கே உரிமை படைத்தது என்று சொன்னால் சரியல்ல எங்களுக்கு தான் சொந்தமானது. வழக்கு சொத்தினை பெயரில் பிரதிவாதி பெயரில் கிரையம் ஏற்பட்ட சமயத்தில் நாங்கள் ஆலங்காயத்தில் தான் வசித்து வந்தோம் என்றாலும், நாங்கள் வெளியூரில் வசித்து வரவில்லை என்றாலும், விற்கப்பட்ட சொத்தினை பொறுத்து தற்போது தவறாக வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருகிறோம் என்றாலும் சரியல்ல.

10) இந்த வழக்கில் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மின் கட்டண ரசீதுகள் அனைத்தும் எனது மாமியார் வழக்கு சொத்தினை விற்பதற்கு முன்பு செலுத்தப்பட்டதற்கான ரசீதுகள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த பிறகு நாங்கள் எப்போதும் அதில் சுவாதீனத்தில் இருந்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருவதால் இந்த வழக்குரையில் சொல்லியிருப்பதுபோல அத்துமீறல் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எங்களது வழக்குரையில் தெரிவித்துள்ள சொத்து விவரம் தவறானது என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவுற்றது.